1980 ஜூலை 12]

(ஆ) வினாக்கள் எடுத்துக்கொள்ளப்பெறுவது.

திரு. செ. சிவசாமி: இன்றைக்கு சட்டப் பேரவை கூடி மூன்று வாரங்களுக்கு மேலாகிவிட்டது. நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒரு குறுகிய கால வினா மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் கொடுக்கப்பட்டும், அவைகளுக்கெல்லாம் பதில்கள் வரவில்லையா ? என்ன காரணம் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளவிகள் வந்து கொண்டிருக்கின்றன. 15 ஆம் தேதி முதல் கேள்விகளுக்கான விடைகள் அளிக்க கேள்விகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. ஆகவே, 15 ஆம் தேதி முதல் கேள்வி நேரம் ரொம்ப சுறுசுறுப்பாகவும், சுவையாகவும் இருக்கும்.

திரு. துரை முருகன்: அன்றைக்கு நல்ல நாளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை விசாரிக்கிறேன்

[முற்பகல் 9–50.]

(5) வரவு செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு.—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,24,41,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, 'பயிற்சி பெற்றும் வேலையின்றி வாடும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பெற வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்'.—

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,24,41,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: பேரவைத் தலைவர்அவர்களே, திண்டிவனம் தொகுதி, மயிலம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள மோழியனூர் கிராமம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.